தமிழ்நாடு சட்டப் பேரவை

திருவள்ளுவர் ஆண்டு 2041, மார்கழி 26

2011 ஜனவரி 10, திங்கட்கிழமை

சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்டம், சட்டமன்றம்-தலைமைச் செயலக வளாகத்தில் உள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. ஆவுடையப்பன் அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"கற்றறிந்தார் கல்வி விளங்கும் கசடறச்
சொற்றெரிதல் முன்னர் அகத்து."

மாசற்ற சொற்களைத் தேர்ந்தெடுத்து உரை நிகழ்த்துவோரிடமே அவர் கற்றுத் தேர்ந்த கல்வியின் பெருமை விளங்கும்.

1. இரங்கற்குறிப்புகள்

முன்னாள் உறுப்பினர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு சட்டப் பேரவை முன்னாள் உறுப்பினர்களான திரு. இரா. திருமன் அவர்கள் 29-10-2010 அன்றும், திருமதி பாப்பா உமாநாத் அவர்கள் 17-12-2010 அன்றும், திரு. ஆர். கருப்பையா அவர்கள் 5-1-2011 அன்றும் மற்றும் திரு. சோ. கலிதீர்த்தான் அவர்கள் 6-1-2011 அன்றும் மறைவுற்ற செய்தியினைப் பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இரா. திருமன் அவர்கள் சேலம் மாவட்டம், ஏற்காடு தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு 1980 முதல் 1984 வரை மிகவும் சிறப்பான முறையில் பணியாற்றினார்கள்.

திருமதி பாப்பா உமாநாத் அவர்கள் திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருவெறும்பூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு *1989* முதல் *1991* வரை திறம்படப் பணியாற்றினார்கள்.

திரு. ஆர். கருப்பையா அவர்கள் அரியலூர் மாவட்டம், அரியலூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு *1967* முதல் *1971* வரை மிகவும் நல்ல முறையில் பணியாற்றினார்கள்.

திரு. சோ. கலிதீர்த்தான் அவர்கள் விழுப்புரம் மாவட்டம், சங்கராபுரம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு *1980* முதல் *1984* வரை மற்றும் *1985* முதல் *1988* வரை மிகவும் சிறப்பாகப் பணியாற்றினார்கள்.

இம்முன்னாள் உறுப்பினர்களது மறைவால் அவர்களைப் பிரிந்து வருந்தும் அவர்களது குடும்பத்தினர்களுக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த இப்பெருந்தகைகளுக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

2. அரசினர் தீர்மானம்

அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்களை கூட்டத் தொடர் முழுவதும் பேரவைப் பணிகளினின்று நீக்கிவைத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு சட்டப் பேரவையின் *17*-வது விதியின்படி, அரசியலமைப்புச் சட்டத்தின் *175* அல்லது *176*-வது பிரிவின்படி, அவை கூடியிருக்கும்பொழுது ஆளுநர் உரை நிகழ்த்துகையிலோ, உரை நிகழ்த்துவதற்கு முன்னரோ, பின்னரோ உறுப்பினர்கள் எவரும் தமது பேச்சினாலோ, ஒழுங்குப் பிரச்சினையினாலோ வேறு எந்தவகையிலும் தடுக்கவோ, குறுக்கீடு செய்யவோ கூடாது.